செ.வெ.எண்.17

நாள்.09.05.2017

## பத்திரிக்கைச் செய்தி

### திருநெல்வேலி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகப் பத்திரிக்கைச் செய்தி தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்

திருநெல்வேலி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் 12.05.2017 அன்று பிற்பகல் 03.00 மணிக்கு தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெறவுள்ளது. அதுசமயம் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள தனியார் நிறுவனங்களின் வேலையளிப்போர் திருநெல்வேலி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு நேரிடையாக வருகை தந்து தங்களது நிறுவனங்களுக்கு தேவையான தகுதியுள்ள நபர்களை தேர்வு செய்யவுள்ளனர். தனியார் வேலைவாய்ப்பு முகாமில் எஸ்எஸ்எல்சி, பிளஸ்2, பட்டப்படிப்பு, ஓட்டுநர்கள், Soft Skill, டிப்ளமோ, ஐடிஐ, மற்றும் கணினி பயிற்சி கல்வித் தகுதியுடைய பதிவுதாரர்கள் கலந்து கொள்ளலாம்.

12.05.2017 அன்று திருநெல்வேலி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் நடைபெறவுள்ள தனியார் வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொள்ள விருப்பமுள்ள திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த பதிவுதாரர்கள் மற்றும் தனியார் நிறுவன பிரதிநிதிகள் 12.05.2017 அன்று பிற்பகல் 03.00 மணிக்கு திருநெல்வேலி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு நேரில் வருகைதந்து பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. தனியார் துறையில் வேலைக்கு தேர்வு செய்யப்படும் பதிவுதாரர்களது வேலைவாய்ப்பு பதிவுமூப்பு விவரங்கள் இரத்து செய்யப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொள்ள விருப்பமுள்ள தனியார் நிறுவனங்கள் தங்களது தேவை விவரங்களை திருநெல்வேலி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ உடன் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. தனியார் வேலைவாய்ப்பு முகாம் ஒவ்வொரு மாதமும் இரண்டாவது வெள்ளிக்கிழமைகளில் திருநெல்வேலி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தால் தவறாது நடத்தப்படும் என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது. இப்பணி முற்றிலும் இலவசமானது.

(த.பி.பா)

**TNSDC:**

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தில் பெயர்கள் திறன் மேம்பாட்டு பயிற்சிக்காக மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்யப்படுகிறது.

**TNPSC Group-IIA**

தற்போது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 1953 பணிக்காலியிடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. பட்டப்படிப்பு தேர்ச்சி பெற்றவர் இத்தேர்வினை எழுதலாம். முற்பட்ட வகுப்பினர் 30 வயது வரையிலும் விண்ணப்பிக்கலாம். பிற வகுப்பினருக்கு வயது வரம்பு கிடையாது. விண்ணப்பதாரர்கள் இணையதளத்தில் விண்ணப்பம் செய்ய கடைசி தேதி 26.05.2017. வங்கி அல்லது தபால் நிலையத்தில் பணம் செலுத்த கடைசி தேதி 29.05.2017. எழுத்துத் தேர்வு நடைபெறும் நாள் 06.08.2017. மேலும் விபரங்களுக்கு www.tnpsc.gov.in என்ற இணையதளத்தைப் பார்க்கவும்.

விண்ணப்பித்தவர்களுக்கு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், திருநெல்வேலியில் தேர்வில் வெற்றி பெற இலவச பயிற்சி வகுப்புகள் 01.08.2017 முதல் தொடங்கப்படவுள்ளது. இப்பயிற்சியில் சேர விருப்பமுள்ளவர்கள் மேற்குறிப்பிட்ட தேர்வுக்கு விண்ணப்பித்த விண்ணப்ப படிவ நகல், வேலைவாய்ப்பு அலுவலக அடையாள அட்டை நகல் மற்றும் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் 2 ஆகியவற்றுடன் திருநெல்வேலி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை அலுவலக வேலை நாட்களில் தொடர்பு கொண்டு தங்கள் பெயரை பயிற்சிக்கு பதிவு செய்து கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது. எனவே தகுதியுள்ள அனைவரும் விண்ணப்பித்து, இலவச பயிற்சி வகுப்பில் சேர்ந்து பயனடையுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவிக்கிறார்.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருநெல்வேலி-9.

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
திருநெல்வேலி